Koviloor Digital Library

ஸ்ரீ சரஸ்வதி வழிபாடு

ACC No. 34045
3-3 Q.'25

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/3

ஸ்ரீ சரஸ்வதி வழிபாடு

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. 3 40A5

தொகுப்பாசிரியர்
இரா. இளையபெருமாள்

சகுந்தலை நிலையம்
58, ஐயப்ப செட்டி தெரு,
மண்ணடி, சென்னை 600 001.

Koviloor Digital Library

முதல் பதிப்பு: டிசம்பர், 1994.
வடிவமைப்பு: (C) சகுந்தலை நிலையம்

விலை ரூ.3.00

லேசர் ஒளி அச்சுக்கோர்வை:
ஜி.ஜி, சென்னை-40
போன்: 6268970

அச்சிட்டோர்:
Karthik Offset Printers,
Madras - 600 005.

பொருளடக்கம்

1. சரஸ்வதி பாடல்கள்
2. சகலகலாவல்லி மாலை
3. சரஸ்வதி அந்தாதி
4. சரஸ்வதி நமஸ்துப்யம்
5. சரஸ்வதி த்யானம்
6. கலைமகள் வழிபாடு
7. அறுபத்து நான்கு கலைகள்

Koviloor Digital Library

சரஸ்வதி பாடல்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்
மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். — பாரதியார்

சரஸ்வதி கவசம்

சரசுவதி என் தலையைக் காக்க வாக்கின்
தலைவியாம் வாக்தேவி நுதலைக் காக்க
விரசுபக வதிகண்ணைக் காக்க நாசி
விமலைவாக் வாதினியாள் காக்க வித்தைக் (கு)
உரியதனித் தேவதைஎன் உதடு காக்க
உயர்புகழ்ப் பிராம்மிபல் வரிசை காக்க
மருவும் 'ஐம்' என் றிடுமனு கண்டம் காக்க
வாழ் 'ஹ்ரீமா'ம் எழுத்துஎன்றன் பிடரைக்காக்க

எழுத்தான 'சிரீம்' என்தோள் காக்க வித்யா
திருஷ்டாத்மா என்மார்பில் இருந்து காக்க
வழுத்துவித்யா ரூபிணிஎன் நாபி காக்க
வாணிகரம் காக்கஎல்லா எழுத்தின் தேவி

Koviloor Digital Library

விழுத்தகளன் அடிகாக்க வாக்கிற் கென்று
மேய அதிட் டானதே வதைதான் என்றன்
முழுத்தஉறுப் பெவற்றினையும் காக்க காக்க
மூள் கிழக்கில் சர்வகண்ட நாசி காக்க.

அங்கியெனும் திசைக்கண்ணே நின்று பீஜாட்
சரிகாக்க மந்திரரா ஜத்தின் தேவி
பொங்குதெற்கி லேயிருந்து காக்க காக்க
புகல்மூன்றக் கரவுருவாள் நிருதி திக்கில்
தங்கியெனைப் புரந்தருள்க மேற்குத் திக்கில்
சாற்றுநா நுனியுறையும் அன்னை காக்க
துங்கமிகு சர்வாம்பி கைதான் வாயு
துன்னுதிசை யினில் என்னைக் காக்க காக்க

சத்தியவா சினிவடக்கில் காக்க எல்லாக்
கலையினிலும் உறைவாள்ஈ சானம் காக்க
நத்துசர்வ பூசிதையாள் ஊர்த்து வத்தில்
நயந்திருந்து காத்தருள்க அதோமு கத்தில்
புத்தகவா சினியாகும் தேவி காக்க
புகழ்கிரந்த பீஜத்தின் உருவாய் நின்றாள்
எத்திசைக ளிலும் இருந்து காக்க காக்க
எளியேனைக் கலைமகள் தான் என்றும் காக்க

இந்தக் கவசத்தை தக்க பெரியோரிடம் உபதேசம் பெற்று முறைப்படி பூஜை செய்தால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறலாம்.

Koviloor Digital Library

சரஸ்வதி சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேவி
செப்பு கவித்தன முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
முத்து நிறத்த வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோ லந்தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்காய் எம்பெரு மாட்டி
அழகிய பூவணை மீதாய்
நோக்காய் என்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூச்சும ரூபி நமஸ்து

Koviloor Digital Library

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிச் செய்த

சகலகலாவல்லி மாலை

கட்டளைக் கலித்துறை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ? சகம் ஏழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்; பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு(து)
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோ? உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே! 3

Koviloor Digital Library

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வி சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்; வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! 4

பஞ்சப்(பு) இதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததுஎன்
னே? நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்(து) இருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உளங் கொண்டுதொண்டர்

Koviloor Digital Library

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமும் அவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந்து அடிமைகொள்
வாய், நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடி யோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்; படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம்உளதோ?
சகல கலாவல்லியே! 10

Koviloor Digital Library

மகாகவி கம்பர் இயற்றிய

சரஸ்வதி அந்தாதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள், என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

படிக நிறமும், பவளச்செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும் சொல் லாதோ கவி?

நூல்

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம
லாசனத் தேவி, செஞ்சொல்
தார் தந்த என்மனத் தாமரை
யாட்டி, சரோருகமேல்
பார் தந்த நாதன் இசைதந்த
ஆரணப் பங்கயத்தாள்
வார் தந்த சோதிஅம் போருகத்
தாளை வணங்குதுமே. 1

வணங்கும், சிலைநுதலும் கழை
தோளும்வன முலைமேற்
சுணங்கும், புதிய நிலவெழு
மேனியும் தோட்டுடனே
பிணங்கும் கருந்தடங் கண்களும்,
நோக்கிப் பிரமன் அன்பால்
உணங்கும் திருமுன்றி லாய், மறை
நான்கும் உரைப்பவளே. 2

Koviloor Digital Library

உரைப்பார் உரைக்கும் கலைகள்
எல்லாம் எண்ணில் உன்னையன்றித்
தரைப்பால் ஒருவர் தரவலரோ?
தண் தரளமுலை
வரைப்பால் அமுது தந்து இங்கெனை
வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடை மலர்வெண்
தாமரைப் பதி மெல்லியலே 3

இயலானது கொண்டு நின்திரு
நாமங்கள் ஏத்துதற்கு
முயலாமை யால்தடு மாறுகின்றேன்;
இந்த மூவுலகும்
செயலால் அமைத்த கலைமகளே,
நின் திருவருளுக்கு
அயலாய் விடாமல் அடியேனையும்
உவந்து ஆண்டருளே. 4

அருணோ தயத்திலும் சந்திரோதயம்
ஒத்து அழகு எறிக்கும்
திருக்கோல நாயகி, செந்தமிழ்ப் பாவை
திசை முகத்தால்
இருக்கோதும் நாதனும், தானும்
எப்போதும் இனிதிருக்கும்
மருக்கோல நாண் மலராள்
என்னை ஆளும் மடமயிலே 5

மயிலே, மடப்பிடியே, கொடியே
இளமான் பிணையே,
குயிலே, பசுங்கிளியே, அன்னமே
மனக் கூர் இருட்கோர்

Koviloor Digital Library

வெயிலே, நிலவெழும் மேனி மின்னே,
இனி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன்
உனது பொற் பாதங்களே, 6

பாதாம் புயத்திற் பணிவார்
தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி;
வெள்ளிதழ் பூஞ்
சீதாம் புயத்தில் இருப்பாள்;
இருப்ப என் சிந்தையுள்ளே
ஏதாம்? புவியில் பெறல்
அரிதாவது எனக்கினியே! 7

இனிநான் உணர்வது எண்ணெண்
கலையாளே, இலகு தொண்டைக்
கனி நாணும் செவ்விதழ் வெண்ணிறத்
தாளைக் கமல அயன்
தனி நாயகியை அகிலாண்டமும்
பெற்ற தாயை மணப்
பனிநாள் மலர் உறை பூவையை
ஆரணப் பாவையையே 8

பாவும் தொடையும் பதங்களும்
சீரும் பலவிதமா
மேவும் கலைகள் விதிப்பாளிடம்,
விதியின் முதிய
நாவும், பகர்ந்த தொல் வேதங்கள்
நான்கும், நறுங்கமலம்
பூவும், திருப்பதம் பூவால்
அணிபவர் புந்தியுமே. 9

Koviloor Digital Library

புந்தியில் கூரிருள் நீக்கும்
புதிய மதியமென் கோ?
அந்தியில் தோன்றிய தீபம்
என்கோ? நல்அருமறை யோர்
சந்தியில் தோன்றும் தபனன் என்கோ?
மணித் தாமம் என்கோ?
உந்தியில் தோன்றும் பிரான்
புயந் தோயும் ஒருத்தியையே. 10

ஒருத்தியை, ஒன்றும் இலா என்
மனத்தின் உவந்து தன்னை
இருத்தியை, வெண்கமலத்து இருப்பாளை,
எண்ணெண் கலை தோய்
கருத்தியை, ஐம்புலனும் கலங்காமல்
கருத்தை யெல்லாம்
திருத்தியை, யான்மற வேன்; திசை
நான் முகன் தேவியையே. 11

தேவரும், தெய்வப் பெருமானும்,
நான்மறை செப்புகின்ற
மூவரும், தானவர் ஆகிஉள் ளோரும்,
முனிவரரும்
யாவரும், ஏனைய எல்லா உயிரும்
இதழ் வெளுத்த
பூவரும் மாதின் அருள்கொண்டு,
ஞானம் புரிகின்றதே. 12

புரிகின்ற சிந்தையின் ஊடே
புகுந்து புகுந்து இருளை
அரிகின்றது, ஆய்கின்ற எல்லா
அறிவின் அரும் பொருளைத்

Koviloor Digital Library

தெரிகின்ற இன்பம் கனிந்தூறி
நெஞ்சம் தெளிந்து முற்ற
விரிகின்றது, எண்ணெண் கலைமாது
உணர்த்திய வேதமுமே. 13

வேதமும், வேதத்தின் அந்தமும்,
அந்தத்தின் மெய்ப் பொருளாம்
பேதமும், பேதத்தின் மார்க்கமும்,
மார்க்கப் பிணக்கு அறுக்கும்
போதமும், போத உருவாகி எங்கும்
பொதிந்த விந்து
நாதமும், நாதவண்டு ஆர்க்கும்
வெண்டாமரை நாயகியே. 14

நாயகம் ஆனமலர் அகமாவதும்
ஞான இன்பச்
சேய் அகம் ஆன மலர் அகமாவதும்
தீவினையால்
ஏய் அகம் மாறிவிடும் அகமாவதும்
எவ்வுயிர்க்கும்
தாயகம் ஆவதும், தாதார்
சுவேத சரோருகமே. 15

சரோருகமே; திருக்கோயிலும்
கைகளும் தாள் இணையும்
உரோருகமும், திரு அல்குலும்,
நாபியும் ஓங்கிருள் போற்
சிரோருகம் சூழ்ந்த வதனமும்
நாட்டமும், சேயிதழும்
ஒரோர் உகம் ஈர் அரை மாத்திரை
ஆன உரை மகட்கே. 16

Koviloor Digital Library

கருந்தாமரை மலர், கண் தாமரைமலர்,
காமருதாள்
அருந்தாமரை மலர், செந்தாமரை மலர்,
ஆலயமாத்
தருந்தாமரை மலர், வெண்தாமரை
மலர் தாவில் எழில்
பெருந்தாமரை மணக்கும்
கலைக்கூட்டப் பிணை தனக்கே. 17

தனக்கே துணிபொருள் என்னும்
தொல்வேதம்; சதுர்முகத்தோன்
எனக்கே சமைந்த அபிடேகம் என்னும்;
இமையவர் தாம்
மனக்கேதம் மாற்றும் மருந்து என்ப;
சூடும் மலர் என்பன் யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை
பாத கமலங்களே. 18

கமலந்தனில் இருப்பாள் விருப்போடு
அம்கரம் குவித்துக்
கமலம் கடவுளர் போற்றும் மென் பூவை;
கண்ணில் கருணைக்
கமலந் தனைக் கொண்டுகண்டு, ஒருகால்
தம் கருத்துள் வைப்பார்
கமலம் கழிக்கும் கலைமங்கை
ஆரணி காரணியே. 19

காரணன் பாகமும் சென்னியும்
சேர்தரு கன்னியரும்
நாரணன் ஆகம் அகலாத் திருவும்
ஓர் நான் மருப்பு

Koviloor Digital Library

வாரணன் தேவியும், மற்றுள்ள
தெய்வ மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்த
குற்றேவல் அடியவரே. 20

அடிவேதம் நாறும்சிறப்பு ஆர்ந்த
வேதம் அனைத்தினுக்கும்
முடிவே, தவள முளரி மின்னே,
முடியா இரத்ன
வடிவே, மகிழ்ந்து பணிவார்
தமது மயல் இரவின்
விடிவே, அறிந்து என்னை ஆள்வார்
தலந்தனில் வேறு இலையே. 21

வேறு இலையென்று, உன்அடியாரிற்,
கூடி விளங்கும் நின்பேர்
கூறலை, யானும் குறித்து நின்றேன்;
ஐம்புலக் குறும்பாம்
ஆறலை கள்வர் மயக்காமல், நின்
மலர்த்தாள் நெறியில்
சேறலை ஈந்தருள்; வெண்தாமரை
மலர்ச் சேயிழையே. 22

சேதிக்கலாம் தர்க்க மார்க்கங்கள்
எவ்வெவர் சிந்தனையும்
சோதிக்கலாம்; உறப் போதிக்கலாம்;
சொன்னதே துணிந்து
சாதிக்கலாம்; மிகப் பேதிக்கலாம்;
முத்தி தான் எய்தலாம்;
ஆதிக் கலாமயில் வல்லி பொற்றாளை
அடைந்தவர்க்கே. 23

Koviloor Digital Library

அடையாள நாள்மலர் அங்கையில்
ஏடும் மணிவடமும்
உடையாளை நுண்ணிடை ஒன்றும்
இலாளை, உபநிடதப்
படையாளை, எவ்வுயிரும்
படைப்பாளைப் பதும நறுந்
தொடையாளை, அல்லது மற்று,
இனியாரைத் தொழுவதுவே 24

தொழுவார் வலம் வருவார், துதிப்பார்
தம்தொழில் மறந்து
விழுவார், அருமறை மெய் தெரிவார்,
இன்ப மெய் புளகித்து
அழுவார், இன்னும் கண்ணில்நீர்மல்குவார்
என்கண் ஆவது என்னே?
வழுவாத செஞ்சொற் கலைமங்கை
பால் அன்பு வைத்தவரே. 25

வைக்கும் பொருளும், இல்வாழ்க்கைப்
பொருளும், மற்றுஎப் பொருளும்
பொய்க்கும் பொருள் அன்றி, நீடும்
பொருள் அல்ல; பூதலத்தின்
மொய்க்கும் பொருளும், அழியாப்
பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளும், கலைமாது
உணர்த்தும் உரைப்பொருளே. 26

பொருளால் இரண்டும் பெறலாகும்
என்ற பொருள் பொருளோ?
மருளாத சொற்கலை வான்பொருளோ?
பொருள் வந்து வந்தித்து

Koviloor Digital Library

அருளாய் விளங்கு மவர்க்கு ஒளியாய்
அறியாத வர்க்கு
இருளாய் விளங்கும், நலங்கிளர்
மேனி இலங்கிழையே. 27

இலங்கும் திருமுகம்; மெய்யிற் புளகம்
எழும்; கண்கள் நீர்
மலங்கும்; பழுதற்ற வாக்கும்
வலிக்கும்; மனம் மிகவே
துலங்கும்; முறுவல் செயக் களி
கூரும் சுழல் புனல் போல்
கலங்கும் பொழுது தெளியும்,
சொல்மானைக் கருதினர்க்கே. 28

கரியார் அள்கமும், கண்ணும்,
கதிர் முலைக் கண்ணும், செய்ய
சரியார் கரமும், பதமும், இதழும்,
தவள நறும்
புரியார்ந்த தாமரையும், திருமேனியும்,
பூண் பணவும்
பிரியாது என்நெஞ்சினும் நாவினும்
நிற்கும்; பெருந்திருவே. 29

பெருந்திருவும் சமயமங்கையும் ஆகி,
என் பேதை நெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப்
போற்றில், எல்லா உயிர்க்கும்
பொருந்திய ஞானந்தரும்; இன்ப
வேதப் பொருளும் தரும்;
திருந்திய செல்வம் தரும்; அழியாப்
பெருஞ் சீர்தருமே. 30

Koviloor Digital Library

ஸ்ரீ ஸரஸ்வத்யை நம:

சரஸ்வதி நமஸ்துப்யம்

ஸரஸ்வதீ நமஸ்துப்யம் வரதே காமரூபிணீ
வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர்ப்பவது மேஸதா
ஸரஸ்வதீ நமஸ்துப்யம் ஸர்வதேவி நமோநம:
ஸாந்தரூபே ஸஸிதரே ஸர்வயோகே நமோநம:
நித்யாநந்தே நிராதாரே நிஷ்களாயை நமோநம:
வித்யாதரே விசாலாக்ஷி ஸுத்தஜ்ஞாநே நமோநம:
ஸுத்தஸ்ப்படிக ரூபாயை ஸூக்ஷ்மரூபே நமோநம:
ஸப்தப்ரஹ்மி சதுர்ஹஸ்தே ஸர்வஸித்யை நமோநம:
முக்தாலங்கிருத ஸர்வாங்க்யை மூலாதாரே நமோநம:
மூலமந்த்ர ஸ்வரூபாயை மூலஸக்த்யை நமோநம:
மனோன்மணி மஹாயோகே வாகீஸ்வரி நமோநம:
வாக்மியை வரதஹஸ்தாயை வரதாயை நமோநம:
வேதாயை வேதரூபாயை வேதாந்தாயை நமோநம:
குணதோஷ விவர்ஜின்யை குணதீப்த்யை நமோநம:
ஸர்வஜ்ஞாநே ஸதாநந்தே ஸர்வரூபே நமோநம:
ஸம்பன்னாயை குமார்யைச ஸர்வஜ்ஞே தே நமோநம:
யோகாநார்ய உமாதேவ்யை யோகாநந்தே நமோநம:
திவ்யஜ்ஞான த்ரிநேத்ராயைதிவ்யமூர்த்யை நமோநம:
அர்த்தசந்த்ர ஜடாதாரி சந்த்ர பிம்பே நமோநம:
சந்த்ராதித்ய ஜடாதாரி சந்த்ர பிம்பே நமோநம:
அணுரூபே மஹாரூபே விஸ்வரூபே நமோநம:
அணிமாத்யஷ்ட ஸித்தாயை ஆனந்தாயை நமோநம:
ஜ்ஞான விஜ்ஞான ரூபாயை ஜ்ஞான மூர்த்யை நமோநம:
நாநாஸாஸ்த்ர ஸ்வரூபாயை நாநாரூபே நமோநம:
பத்மதா பத்மவம்ஸாச பத்மரூபே நமோநம:
பரமேஷ்ட்யை பராமூர்த்யை நமஸ்தே பாபநாஸினீ
மஹாதேவ்யை மஹா காள்யை மஹா லக்ஷ்மியை நமோநம:
ப்ரஹ்ம விஷ்ணு ஸிவாயைச ப்ரஹ்ம நார்யை நமோநம:
கமலாகர புஷ்பாச காமரூபே நமோநம:
கபாலி கர்மதீப்தாயை கர்மதாயை நமோநம:

Koviloor Digital Library

சரஸ்வதி த்யானம்

1. ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவதுமே ஸதா

2. ஸரஸ்வதீம் சுக்லவாஸாம் ஸுதாம்சு ஸமவிக்ரஹாம்
ஸ்படிகாக்ஷஸ்ரஜம் பத்மம் புஸ்தகம் ச சுகம் கரை:

3. சதுர்பிர்ததீம் தேவீம் சந்த்ரபிம்ப ஸமானனாம்
வல்லபாம் அகிலார்த்தானாம் வல்லகீ வாதனப்ரியாம்

4. பாரதீம் பாவயே தேவீம் பாஷாணாம் அதிதேவதாம்
பாவிதாம் ஹ்ருதயே ஸத்பி : பாமினீம் பரமேஷ்புன:

5. சதுர்புஜாம் சந்த்ரவர்ணாம் சதுரானன வல்லபாம்
நமாமி தேவி வாணீ த்வாம் ஆச்ரிதார்த்த ப்ரதா யினீம்

6. பாஹி பாஹி ஜகத்வந்த்யே நமஸ்தே பக்தவத்ஸலே
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமோ நம:

7. பாசாங்குச தரா வாணீ வீணாபுஸ்தக தாரிணீ
மம வக்த்ரே வஸேந்நித்யம் ஸந்துஷ்டா ஸர்வதா சிவா

8. சதுர்தசஸு வித்யாஸு ரமதே யா ஸரஸ்வதீ
ஸாதேவி க்ருபயாயுக்தா ஜிஹ்வாஸித்திம் கரோதுமே

9. பாஹிமாம் பாவனே தேவி ரக்ஷ ராக்ஷஸநாசினி
அவ மாம் அம்புஜாவாஸே த்ராஹிமாம் துஹினப்ரபே

10. தேஹி தேவி கலாதாக்ஷயம் வாணி வாக்படுதாம் திச
ஸரஸ்வதி ஸுதான் ரக்ஷ கலே பாலயமே குலம்

Koviloor Digital Library

ச்யாமளா தண்டகம்

மாணிக்யவீணா முபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்ஜுள வாக்விலாஸாம்
மஹேந்த்ர நீலத்யுதி கோமளாங்கீம்
மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி
சதுர்புஜே சந்த்ர கலவதம்ஸே
குசோன்னதே கும்கும ராகசோணே
புண்டரேக்ஷு பாஸாங்குஸ புஸ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேகமாத :
மாதா மரகதஸ்யாமா மாதங்கீ மதஸாலினீ
தூர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்ப வனவாஸினீ
ஜய மாதங்க தனயே ஜயநீலோத்பலத்யுதே
ஜய ஸங்கீத ரஸிகே ஜயலீலா ஸுகப்ரியே

ஜய ஜனனி ஸுதா ஸமுத்ரான்த ஹ்ருத்யன் மணித்வீப ஸம்ரூட பில்வாடவீ மத்ய கல்பத்ருமாகல்ப காதம்ப காந்தார வாஸப்ரியே, க்ருத்திவாஸப்ரியே, ஸர்வலோகப்ரியே!

ஸாதராரப்த ஸங்கீத ஸம்பாவனா ஸம்ப்ரமாலோல நீபஸ்ரகாபதத தூளீஸநாதத்ரிகே ஸானுமத்புத்ரிகே!

ஸேகரீபூத ஸீதாம்ஸுரேகா மயூகாவலீபத்த ஸுஸ்நிக்த நீலாலகஸ்ரேணி ஸ்ருங்காரிதே லோக ஸம்பாவிதே!

காமலீலா தநுஸ்ஸந்நிப ப்ரூலதா புஷ்பஸந்தோஹ ஸந்தேஹக்ருல்லோசனே வாக்ஸு தாஸேசனே!

சாருகோரோசனா பங்ககேளீலலாமாபிராமே ஸுராமேரமே

ப்ரோல்லஸத்வாளிகா மௌக்திக ஸ்ரேணிகா சந்த்ரிகா மண்டலோத்பாஸி லாவண்ய கண்டஸ்த்தலன்யஸ்த கஸ்தூரிகா பத்ரரேகா ஸமுத்பூத ஸௌரப்யஸம்ப்ராந்த ப்ருங்காங்க நாகீத ஸாந்த்ரீபவன் மந்த்ர தந்த்ரீஸ்வரே ஸுஸ்வரே பாஸ்வரே!

Koviloor Digital Library

வல்லகீவாதன ப்ரக்ரியா லோல தாளீதளாபத்த தாடங்க பூஷாவிஸேஷான்விதே ஸித்த ஸம்மானிதே!

திவயஹாலாமதோத்வேலஹேலால ஸச்சக்ஷுராந்தோளன ஸ்ரீஸமாக்ஷிப்தகர்ணைக் நீலோத் பலே, நிர்மலே. ஸ்யாமளே, பூரிதாஸேஷ லோகாபி வாஞ்சாபலே, ஸ்ரீபலே!

ஸ்வேத பிந்தூல்லஸத்பால லாவண்ய நிஷ்யந்தஸந்தோஹ ஸந்தேஹக்ருந்நாஸிகாமௌக்திகே ஸர்வ விஸ்வாத்மிகே, காளிகே!

முக்தமந்தஸ்மிதோ தாரவக்த்ரஸ்புரத்பூ கதாம்பூல கர்பூர கண்டோத்கரே, ஞான முத்ராகரே, ஸர்வ ஸம்பத்கரே, பத்மபாஸ்வத்கரே!

குந்தபுஷ்பத்யுதிஸ் நிக்ததந்தாவலீ நிர்மலாலோல கல்லோ லஸம்மோளனஸ்மேரஸோணாதரே, சாருவீணாதரே, பக்வபிம் பாதரே

ஸ்ரீ ஸரஸ்வத்யஷ்டோத்தரசத நாமாவளி

(கீழ்க்கண்ட ஒவ்வொரு நாமாவின் முன்னால் 'ஓம்' என்றும் பின்னால் 'நம' என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டும்)

ஓம் ஸரஸ்வத்யை
மஹாபத்ராயை
மஹாமாயாயை
வரப்ரதாயை
ஸ்ரீப்ரதாயை
பத்மநிலயாயை
பத்மாக்ஷ்யை
பத்மவக்த்ராயை
ஸிவானுஜாயை
புஸ்தகப்ருதே
ஜ்ஞாநமுத்ராயை
ரமாயை
பராயை
காமரூபாயை
மஹாவித்யாயை
மஹாபாதகநாஸிந்யைத
மஹாஸ்ரயாயை
மாலிந்யை

Koviloor Digital Library

மஹாபோகாயை
மஹாபுஜாயை
மஹாபாகாயை
மஹோத்ஸாஹாயை
திவ்யாங்காயை
ஸுரவந்திதாயை
மஹாகாள்யை
மஹாபாஸாயை
மஹாகாராயை
மஹாங்குஸாயை
பீதாயை
விமலாயை
விஸ்வாயை
வித்யுந்மாலாயை
வைஷ்ணவ்யை
சந்த்ரிகாயை
சந்த்ரவதநாயை
சந்த்ரலேகா விபூஷிதாயை
ஸாவித்ர்யை
ஸுரஸாயை
தேவ்யை
திவ்யாலங்கார பூஷிதாயை
வாக்தேவ்யை
வஸுதாயை
தீவ்ராயை
மஹாபத்ராயை
மஹாபாலாயை
போகதாயை
பாரத்யை
பாமாயை
கோவிந்தாயை
கோமத்யை
ஸிவாயை
ஜடிலாயை
விந்த்யவாஸாயை
விந்த்யாசல விராஜிதாயை
சண்டிகாயை
வைஷ்ணவ்யை
ப்ராஹ்ம்யை
ப்ரஹ்மஜ்ஞாநைகஸாதநாயை
ஸௌதாமிந்யை
ஸுதாமூர்த்யை
ஸுபத்ராயை
ஸுரபூஜிதாயை
ஸுவாஸிந்யை
ஸுநாஸாயை
விநித்ராயை
பத்மலோசநாயை
வித்யாரூபாயை
விஸாலாக்ஷ்யை
ப்ரஹ்மஜாயாயை
மஹாபலாயை
த்ரயீமூர்த்யை
த்ரிகாலஜ்ஞாயை
த்ரிகுணாயை
ஸாஸ்த்ரரூபிண்யை
ஸும்பாஸுரப்ரமதிந்யை
ஸுபதாயை
ஸ்வராத்மிகாயை
ரக்தபீஜ நிஹந்த்ர்யை

Koviloor Digital Library

சாமுண்டாயை
அம்பிகாயை
முண்டகாயப்ரஹரணாயை
தூம்ரலோசந மர்தநாயை
ஸர்வதேச ஸ்துதாயை
ஸௌம்யாயை
ஸுராஸுர நமஸ்க்ருதாயை
காளராத்ர்யை
கலாதாராயை
ரூபஸௌபாக்ய தாயிந்யை
வாக்தேவ்யை
வராரோஹாயை
வாராஹ்யை
வாரிஜாஸநாயை
சித்ராம்பராயை
சித்ரகந்தாயை
சித்ரமால்ய விபூஷிதாயை

காந்தாயை
காமப்ரதாயை
வித்யாயை
வித்யாதர ஸுபூஜிதாயை
ஸ்வேதாநநாயை
நீலபுஜாயை
சதுர்வர்கபலப்ரதாயை
சதுராநநஸாம் ராஜ்யாயை
ரக்தமத்யாயை
நிரஞ்ஜநாயை
ஹம்ஸாஸநாயை
நீலஜங்க்காயை
ப்ரஹ்ம விஷ்ணு
ஸிவாத்மிகாயை.

காயத்ரி – 'மஹா தேவ்யை ச
வித்மஹே விதிபத்னை ச தீமஹி
தன்ன: ஸரஸ்வதி ப்ரசோதயாத்!

கலைமகள் வழிபாடு

நூற்றெட்டுப் போற்றி

(ஒவ்வொரு வரிக்கும் முடிவில் 'போற்றி' என்று சேர்த்துச் சொல்ல வேண்டும்)

அறிவினுக் கறிவாய் ஆனாய்
செறிஉயிர் நாத்தொறும் திகழ்வோய்
ஆட்சிகொள் அரசரும் அழியாய்
காட்சிசேர் புலவர்பால் கனிவோய்
இல்லக விளக்கம் இறைவி

Koviloor Digital Library

நல்லக மாந்தரை நயப்பாய்
ஈரமார் நெஞ்சினர் இடந்தோய்
ஆரமார் தொடையால் அணிவோய்
உலகியல் நடத்தும் ஒருத்தி
உலகில் உயர்க்கறி வளிப்போய்

ஊனமில் வெள்ளை உருவினாய்
கானக் குயில்மொழிக் கன்னியே
எண்ணிலாப் புகழுடை எந்தாய்
பண்ணியல் தமிழின் பாவாய்
ஏழுல குந்தொழும் இறைவி

சூழுநல் அன்பரின் துணைத்தாய்
ஐதுசேர் வெண்கலை ஆடையாய்
மைதீர் முத்து மாலையாய்
ஒட்டக் கூத்தர்க் குதவினோய்
வட்டவெண் தாமரை வாழ்வோய்

ஓதுவார் அகத்துறை ஒளியே
போதுசேர் அருட்கண் பொற்கொடி
ஒளவைமு தாட்டியாய் ஆனாய்
கௌவையே இல்லாக் கலைமகள்
கல்விக் கரசே கலைக்கடல்

நல்விற் புருவ நங்காய்
செங்கையில் புத்தகம் சேர்த்தோய்
அங்கையில் படிகம் அடக்கியோய்
சமை குண் டிகைக்குத் தாயே
அமைவுகொள் ஞான அருட்கையாய்

அஞ்சலென் றருள்தரும் அன்னே
மடமறு நான்முகன் வாழ்வே
திடமுறு செந்தமிழ்த் தெளிவே
கண்கண்ட தெய்வக் கண்மணி

Koviloor Digital Library

பண்கண்ட பாவிற் படர்ந்தனை
தந்தையும் தாயுமாய்மத் தழைப்போய்
மைந்தரோ டொக்கலாய் வளர்வோய்
நல்லோர் சொற்படி நடப்போய்
பல்லோர் பரவும் பனுவலோய்

மன்னரும் வணங்க வைப்போய்
உன்னரும் பெருமை உடையோய்
யாவர்க்கும் இசைந்த யாயே
பாவும் பொருளுமாய்ப் படர்வோய்
பூரப் பரிவரு பொற்கொடி

வார நெஞ்சினர் வழித்துணை
சிலம்பொலிச் சிற்றடித் திருவருள்
நலஉமை இடக்கணாம் நாயகி
வள்ளைக் கொடிச்செவி மானே
பிள்ளை மொழித்தமிழ்ப் பிராட்டி

அழகின் உருவே அணங்கே
பழகு தமிழின் பண்ணே
இளமை குன்றா ஏந்திழாய்
வளமை குளிர்மை மன்னினாய்
அறனும் பொருளும் அருள்வோய்

வறனறு இன்பம் மலிந்தோய்
சொன்ன கலைகளின் தொடர்பே
மன்னிய முத்தின் வயங்குவாய்
கம்பர்க் கருளிய கருத்தே
நம்பினோர்க் கின்பருள் நல்லோய்

காண்டகும் எண்ணெண் கலையாய்
வேண்டா வெண்மையை விலக்குவோய்
கிட்டற் கரிய கிளிமொழி
வெட்ட வெளியாம் விமலை
கீர்த்தியார் வாணியாம் கேடிலாய்

Koviloor Digital Library

ஆர்த்தியார் அன்பரின் அகத்தாய்
குமர குருபரர்க் குதவினோய்
அமரரும் வணங்கும் அம்மே
கூர்மையும் சீர்மையும் கொண்டோய்
ஆர்வலர் ஏத்த அருள்வோய்

கெடலரும் பாவின் கிழத்தி
விடலரும் அறிவின் வித்தே
கேள்வி கல்விக் கிழமையோய்
ஆள்வினை அருளும் அமிழ்தே
கையகக் கழுநீர்க் கலைமகள்

பொய்நீர் அருங்கலைப் பொருளே
கொண்டற் கூந்தற் கொம்பே
வண்டமிழ் வடமொழி வளனே
கோதில் பலமொழிக் குருந்தே
போதில் உறையும் பொன்னே

சங்கொத் தொளிர்நிறத் தாளே
அங்கண் அருள்நிறை அம்மா
சாதலும் பிறத்தலும் தவிர்ந்தோய்
போதலும் இருத்தலும் போக்கினோய்
சினமும் செற்றமும் தீர்ந்தோய்

மனமும் கடந்த மறைபொருள்
சீரார் சிந்தா தேவியே
ஏரார் செழுங்கலை இன்பே
சுடரே விளக்கே தூயாய்
இடரே களையும் இயல்பினாய்

சூழும் தொண்டரின் தொடர்பே
ஏழுறும் இசையின் இசைவே
செவ்விய முத்தமிழ்த் திறனே
ஔவியம் அறுக்கும் அரசி
சேவடிச் செல்வம் அளிப்போய்

Koviloor Digital Library

பாவடிப் பயனே படைத்தருள்
சைவம் தாங்கும் தனிக்கொடி
மையெலாம் போக்கும் மருந்தே
சொல்லொடு பொருளின் சுவையருள்
அல்லொடு பகலுன் அடைக்கலம்

சோர்விலா அறிவின் தொடர்பே
தீர்விலா நுண்கலைத் திறனே
தமிழ்கலை தமிழ்ச்சுவை தந்தருள்
தமிழ்மந் திரமொழித் தண்பயன்
தாயே நின்னருள் தந்தாள்

தூயநின் திருவடி தொழுதனம்
திருவுடன் கல்வித் திறனருள்
இருநிலத் தின்பம் எமக்கருள் போற்றியே

கூத்தனூர் நாயகி

பேசவே முடியாத நாவினில் நின்திருப்
பெயரைநீ எழுதி வைத்தாய் – அவன்
பேசுமொழி யாவுமே பாசம் இணையவே
பெற்றுமே பெருமைதந்தாய் – சிறு
மாசும்உறை யாததோர் மழலை மனத்தினை
மாதா நீ தந்திடுவாய் – என்னுள்
ஓசையாய் எழுவதும் உன்குரல் ஆக்கியே
ஒற்றுமை கூட்டி விடுவாய்.
கையினில் வீணையும் கட்கமும் நூல்கொண்ட
கருணையின் வாணியுன்னை – என்றன்
மெய்யுருகப் பாடியே வேண்டுவேன் நித்தமும்
வெற்றியின் கொற்றமே வா – நெஞ்சில்

Koviloor Digital Library

ஐயமும் நீங்கிவிடத் தெய்வமே கூத்தனூர்
 ஆண்டிடும் அருள்விளக்கே — நான்
செய்வதொன்றும் அறிய மாட்டேன் எத்தவறும்
 செய்யாமல் காத்தருள்கவே.
பொருள் வேண்டுமென்றுமோர் போதைத் துடிப்பினில்
 பொழுதைக் கழிக்கலாமோ? — இந்த
இருள்மூண்ட சூழலில் என்னிருகண் பொன்னொளியாய்
 இங்கு நீ வந்திடாயோ? — உன்றன்
விரல் தீண்டும் வீணையின் மெல்லிழையின் இன்னொலியில்
 மின்னிவரத் தீந்தமிழைத் தா! — உன்றன்
அருள் வேண்டி நிற்கின்ற ஆத்ம தவத்திற்கும்
 ஆசிகள் தந்திடம்மா!
போனதே பொழுதென்று போனபின் புலம்பாமல்
 பொன்னாக்கி வைப்பதற்கே — என்றன்
ஞானத்தேவி வந்து நடனமே ஆடிடுக
 நல்லருளில் என்னுள்ளமே — எண்ணம்
கூனதோ கண்களும் குருடதோ கூத்தனூர்
 கொற்றவி குறையை நீக்கு — இந்த
ஊனதே நின்பணியில் ஊன்றிக் கிடக்கவை
 உள்ளூரத் தெம்பாக்கி வை.
அச்சத்தை நெஞ்சத்தின் அப்பாலுக்கப்பாலாய்
 அம்மாநீ ஓட்டவேண்டும் — இங்கு
மிச்சத்தி லேநிற்கும் வீரத்தில் என்குரல் உன்
 மேன்மைகள் பாடவேண்டும் — வான
நட்சத்தி ரம்என்றன் கைகளிலே விழவேண்டும்
 நன்மாலை ஆகவேண்டும் — நின்றன்
உச்சத்தின் மகுடமாய் ஒளிவீசக் கூத்தனூர்
 உரைகின்ற வாணி அருளே.
பாதியாய் வாழ்வதும் பாதியாய் முடிவதும்
 பக்குவம் அற்றதலவோ! — நெடு

Koviloor Digital Library

வீதியாய்ச் சென்றாலும் விளக்கமே தெரியாமல்
வெறுமையாய்ப் போவதிலையோ! — அருள்
ஜோதியே நீதியே ஆதியே கூத்தனூர்ச்
சுயமான ஒளி வெள்ளமே — நின்றன்
சீதளத் தாமரையின் செந்தூர அடியோடு
சேர்த்துவை என்று மென்னை
தப்பிக்க ஓடினால் தண்டனை துரத்தி வரும்
சத்தியம் தடுத்து நிற்கும் — அன்றே
எப்பக்கம் போனாலும் யாவரும் எதிரியாய்
எடுத்தகை ஓங்கி நிற்பார் — வான
மப்புக்குப் பின்னாலே மழைவரும் என்பதில்
மாறாத உண்மையுண்டு — உள்ளம்
ஒப்பிக்க உன்நாமம் கூத்தனூர் வாணியே
உயர்வான புகழுமேதுவோ?
கொடுத்ததைக் கேட்பதும் கேட்டதைக் கொடுப்பதும்
கொள்கையில் சரியாயினும் — மனம்
தடுப்பதைச் செய்வதும் தானேயென்றிருப்பதும்
தர்மத்தின் நிறைவாகுமா! — இங்குப்
படித்ததைச் சொன்னவர் பலமுறை சொல்லியும்
பக்குவம் பெற்றதென்ன? — என்னை
நடத்தியே செல்லவும் நாடினேன் கூத்தனூர்
நாயகி வாணியருளே.
காலையில் ஒளியன்று மாலையே மறைகிறது
காட்சியில் கண்டதென்ன? — வண்ணச்
சேலையின் வரிக்கோடு சிந்தையில் தீப்பற்றி
சிறுதூசு மாக்கவிலையோ? — இங்கு
நாளையும் கோளையும் நம்புவதனால் மட்டும்
நலம்வந்து கூடிவிடுமோ? — உன்றன்
தாளினில் தலைவைத்துக் கூத்தனூர் தாயேநான்
தரம் உயர வேண்டுமம்மா!

Koviloor Digital Library

நின்நினைவில் ஓடும்உடல் நின்நினைவில் ஆடும்உயிர்
நின்நினைவில் பாடும்குரலும் — என்றும்
நின்நினைவில் மூடியகண் நின்நினைவில் சூடியபொன்
நின்நினைவில் பொன்னூஞ்சலே — என்றும்
நின்நினைவில் கூத்தனூர் நிலைகொண்ட வாணியே
நின்நினைவும் என்செயலதோ — என்றும்
நின்நினைவில் தேடும் அருள் நின்நினைவை நாடுமனம்
நின்நினைவில் கோடி பெறுமே.

அறுபத்து நான்கு கலைகள்

1. அக்கரவிலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதிசாத்திரம்
8. சோதிட சாத்திரம்
9. தர்ம சாத்திரம்
10. யோக சாத்திரம்
11. மந்திர சாத்திரம்
12. சகுன சாத்திரம்
13. சிற்ப சாத்திரம்
14. வைத்திய சாத்திரம்
15. உருவ சாத்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சத்தப்பிரமம்
23. வீணை
24. வேணு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திரபரீட்சை
28. கனகபரீட்சை
29. இரதபரீட்சை
30. கசபரீட்சை
31. அசுவபரீட்சை
32. இரத்தினபரீட்சை
33. பூமிபரீட்சை
34. சங்கிராம இலக்கணம்

Koviloor Digital Library

35. மல்யுத்தம்
36. ஆகருடணம்
37. உச்சாடணம்
38. வித்து வேடணம்
39. மதனசாத்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரச வாதம்
43. காந்தருவ வாதர்
44. பைபீல வாதம்
45. கவுத்துக வாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நட்டம்
49. முட்டி
50. ஆகாயப்பிரவேசம்
51. ஆகாய கமனம்
52. பரகாயப் பிரவேசம்
53. அதிரிசயம்
54. இந்திரசாலம்
55. மகேந்திர சாலம்
56. அக்கினித்தம்பம்
57. சலத்தம்பம்
58. வாயுத்தம்பம்
59. திட்டித்தம்பம்
60. வாக்குத்தம்பம்
61. சுக்கிலத்தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத்தம்பம்
64. அவத்தைப் பிரயோகம்

தம்பத நிலை நாடியோர் நாவுள்
மலரும் கலை வாணியே
அம் ஸமதை வாகன மாய்
கொண்டவளே – ஸம்பவ
நிலையுள் மிளிரும் சகலகலா
வல்லியே மலரடி தனை
எம்முள் பதித்தருள் வாயே
பிரமன் நிலையுறு பூரணியே.

Koviloor Digital Library

சரஸ்வதி துதி

வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்கமலம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு விளரி பாடக்
கண்மலரு மாயிரந்தோட விழ்ந்து முகை
நெகிழ்த்த கமலத்தில் வாழெண்
கண்மலருந் சதுர்முகத் தோனா வில்வளர்
வாணிபதங் கருத்துள் வைப்பாம்.

– மச்சபுராணம்

அண்ட புவனங்களினை ஆக்குமயன் றேவியுனை
மண்டலத்தில் போற்றி வரம் பெற்ற தொண்டருக்கு
ஆதரவாய் நின்று அருளினாய் முத்தமிழும்
போதமளி வாணி யுன்றாள் போற்றி!

– மங்களேஸ்வரியம்

ஸ்ரீ ஸரஸ்வதி காயத்ரீ

ஓம் மஹாதேவ்யை ச வித்மஹே ப்ரஹ்ம
பத்ன்யை ச தீமஹி ।
தந்நோ வாணீ ப்ரசோதயாத் ॥

மஹா தேவியை அறிவோமாக. பிரம்ம பத்னியைத் தியானிப்போமாக. அத்தகைய தியானத்தில் வாணீ நம்மைத் தூண்டுவிப்பாளாக.

Koviloor Digital Library

Koviloor Digital Library

எங்களின் பிற நூல்கள்

வெள்ளிக்கிழமை கதை	2.00
ஸ்ரீ காமாக்ஷி அம்மாள் (விருத்தம், அகவல்)	2.00
அபிராமி அந்தாதி	3.00
திருவிளக்கு வழிபாடு	3.00
பிரதோஷ வழிபாடு	3.00
துர்க்கை வழிபாடு	3.00
ஸ்ரீ சரஸ்வதி வழிபாடு	3.00
ஸ்ரீ குருவாயூரப்பன் வழிபாடு	3.00
நவக்கிரக துதிப்பாடல்கள்	3.00
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வழிபாடு	3.00
ஸ்ரீ அஷ்டலட்சுமி வழிபாடு	3.00
தினவழிபாடு	3.00
சிவசெந்தி மாலை	3.00
மாரியம்மன் தாலாட்டு	3.00
வடிவுடையம்மன் வழிபாடு	3.00
ஸ்ரீ சத்ய நாராயண பூஜை	3.00
ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்ர நாமாவளி	3.00
அருள்தரு அன்னை மூகாம்பிகை வழிபாடு	3.00

சகுந்தலை நிலையம்

58, ஐயப்ப செட்டி தெரு மண்ணடி, சென்னை-600 001